## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

## வாக்குமூல படிவம்
## OS.No. 254/2023

பெயர் : துளசிமணி வா.சா : 2
த/க/பெயர் : N. ஸ்ரீமான் சிங்காரம் தேதி : 12–08–2025

வா.சாட்சி 2– ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. கோ. ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. என்னுடைய கணவருக்கு உடன் பிறந்த மூத்த சகோதரர் தாமோதிரன் மற்றும் இளைய சகோதரி மோகனாம்மாள் (எ) சுமதி ஆகியோர் உள்ளார்கள். என்னுடைய மாமியார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். என்னுடைய மாமியார் முன்பு குமாரபாளையத்தில் வசித்து வந்தாரா என்றால் ஆமாம், என்னுடைய மாமியார் கந்து வட்டிக்கு பணம் கொடுத்து வசூல் செய்து வந்தார் என்றால் சரிதான். எனவே அவருக்கு ஊரில் கந்துகாரம்மா என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான்.

2. என்னுடைய மாமியாரிடம் பணம் வாங்கியவர்களின் வீடுகளுக்கு சென்று வட்டியை வசூல் செய்வார் என்றால் சரிதான். அவ்வாறு வட்டிக்கு பணம் கொடுப்பது குறித்து பதிவேடுகளில் எழுதிவைப்பாரா என்றால் இல்லை. காலண்டரில் எழுதிவைப்பார். வசூல் செய்யும் போது சற்று கடுமையாக நடந்துகொள்வார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 கடன் பத்திரத்தில் என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று 11.09.2014 ம் தேதி பிரதிவாதிகள் கடன் வாங்கியதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

3. மீண்டும் 10 நாட்கள் கழித்து என்னுடைய மாமியாரிடம் பிரதிவாதிகள் கடனுக்கு பணம் கேட்டார்களா என்றால் ஆமாம். இவ்வழக்கில் வாதியான என் கணவர் அவரிடம் பிரதிவாதிகள் பணம் கேட்டதாக பிராதில் கூறியிருப்பது உண்மையா என்றால் ஆமாம். உண்மை தான். அவ்வாறு எனில் என் மாமியாரிடம் பணம் கேட்டதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. முதலில் என்னுடைய மாமியாரிடம் பணம் கேட்டார்கள் என் மாமியார் பணம் இல்லை என்று கூறியதால் என் கணவரிடம் பணம் கேட்டார்கள்.

4. மேற்படி விவரத்தை என் கணவர் பிராதில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய மாமியார்தன்னிடம் பணம் இல்லாததால் எங்களிடம் பணம்கேட்டதாகவும் அதை நாங்கள் ஏற்பாடு செய்வதாக கூறியதையும் என் கணவர் பிராதில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் கூறியிருப்பார். மேற்படி விவரங்களை என் கணவர் பிராது மற்றும் அவருடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல.

5. என் மாமியார் கூறியதன் பெயரில் நான் என்னிடம் இருந்த பணத்தையும், மேலும் என்னுடைய நகைகளை அடமானம் வைத்து வந்த பணத்தையும் பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக என் கணவர் தாக்கல் செய்த பிராது மற்றும் அவருடைய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 அடமான கடன் பத்திரம் எழுதப்பட்ட தினத்தன்று நானும், பத்திர சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். நான் அவ்வாணத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை.

6. ம.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்ட தினத்தன்று நானும், பத்திர சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் என்றால் சரிதான். நான் அவ்வாணத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. அடமான கடன் பத்திரம் எழுதவேண்டும் என்று பத்தர எழுத்தர் பூங்கொடியிடம் நான் தான் கூறினேன். எழுதுவதற்கு வேண்டிய விவரங்கள் அனைத்தையும் அவர் கேட்டு தெரிந்து கொண்டு அடமான பத்திரம் தயார் செய்தார் என்றால் சரிதான்.

7. அடமான பத்திரம் மாமியார் பெயரில் எழுதிய தினத்தன்று மேற்படி விவரங்களை கூறினேன். என்னுடைய கணவர் பெயரில் ஒப்பந்த பத்திரம் எழுதியதினத்தன்று அடமான பத்திரம் எழுதுமாறு கூறினேனா என்றால் ஆமாம். ஆனால் ஒரே சொத்திற்கு இரு அடமான பத்திரங்கள் எழுதமுடியாது என்றும் ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொள்ளுமாறு பத்திர எழுத்தர் கூறியதால் ஒப்பந்த பத்திரம் எழுதினோம்.

8. அடமான பத்திரம் எழுதபட்டதா அல்லது ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டதா என்ற விவரத்தை பிரதிவாதிகளிடம் தெரிவித்தோமா என்றால் தெரிவித்தோம். எப்போது தெரிவித்தோம் என்றால் 2 நாட்களுக்கு முன்னர் தெரிவித்தோம். ஒப்பந்த பத்திரம்

எழுதுவதாகதான் பிரதிவாதிகளிடம் தெரிவித்தோம். ம.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை சொத்தை விற்பதற்காக என்று பத்திரத்தில் குறிப்பிடுமாறு யார் கூறினார்கள் என்றால் என்னுடைய மாமியார் கூறியிருப்பார்.

9. ம.சா.ஆ.1 ல் கடன் பத்திரம் என்று எங்கேயாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் கடன் பத்திரம் என்று எங்கும் குறிப்பிடபடவில்லை. ம.சா.ஆ.1 எழுதுவதற்கு முன்னர் எனக்கும் என்னுடைய கணவருக்கும் மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட வில்லை என்றால் சரியல்ல. இரண்டு நாட்களுக்கு முன்னரே கூறிவிட்டோம். இரண்டு நாட்களுக்கு முன்னர் பிரதிவாதிகளுக்கு தெரிவித்தோம் என்ற விவரத்தை என் தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ள பிரமாணபத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. ம.சா.ஆ.1 ல் 100 க்கு 2 ரூ. வட்டி பேசபட்டதாக எங்காவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடபடவில்லை. என்னுடைய மாமியார் 16.05.2023 ம் தேதியன்று புற்றுநோய் மற்றும் மாரடைப்பு காரணமாக இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு 7 , 8 மாதங்களுக்கு முன்னர் தான் அவருக்கு புற்றுநோய் இருந்த விவரம் தெரியவந்தது. வாதியான என் கணவரும், நானும் 18 வருடங்களாக திருப்பூரில் வசித்து வருகிறோம்.

11. என்னுடைய மாமியாருக்கு புற்றுநோய் இருப்பது தெரியவந்த பின்னர் தான் நாங்கள் குமாரபாளையத்திற்கு வந்து குடும்ப நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் ம.சா.ஆ.1 மற்றும் 3 எழுதப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியவந்தது என்றால் சரியல்ல. 2014 –ம் ஆண்டிலேயே மேற்படி ஆவணங்கள் குறித்த விவரம் எனக்கு தெரியும். என்னுடைய மாமியார் பிரதிவாதிகளிடம் வட்டி வசூல் செய்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் பிரதிவாதிகளிடம் வட்டி வசூல் செய்யவில்லை என்ற விவரம் எனக்கு தெரியும்.

12. ம.சா.ஆ.1 மற்றும் 3 ஏற்படுத்தப்பட்டு 9 ஆண்டுகள் கழித்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 9 ஆண்டுகளாக பிரதிவாதகள் அசலையோ அல்லது வட்டியையோ கொடுக்கவில்லை என்றாலும் அதற்கு 9 ஆண்டுகளாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும், சரிதான். கேட்கும்

போதெல்லாம் கொடுப்பதாக கூறினார். என்னுடைய மாமியார் கொடுத்த கடனுக்கான வட்டி தொகையை பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்று கூறுகிறேனா என்றால் ஆமாம்.

13. பிரதிவாதிகளை யார் என்றே தெரியாது என்று என்னுடைய கணவர் அவருடைய குறுக்குவிசாரணையில் கூறியிருக்கும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் மாணிக்கம் தெரியும் என்றும், முருகனை பார்த்து அதிக நாட்கள் ஆகிவிட்டதால் அவரை தெரியாது என்று கூறியிருப்பார். முருகன் கோவையில் குடிநீர் வாரியத்தில் மேற்பார்வையாளராக பணியாற்றுவதாக மாணிக்கத்தின் மனைவி முன்பு ஒரு முறை என்னிடம் கூறியுள்ளார்.

14. வழக்கில் என் கணவர் பிரதிவாதிகளுக்கு கடனிற்கு பணம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் நான் தற்போது என் நகைகளை அடமானம் வைத்த பணத்தை பிரதிவாதிகளுக்கு கடனாக பணத்தை கொடுத்தேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 கிரைய ஒப்பந்திர பத்திரத்தின் படி என்னுடைய கணவருக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே சொத்தை வாங்குவதாகவும், விற்பதாகவும் எவ்வித பேச்சுவார்த்தையும் உடன்பாடும் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

15.மேலும் ம.சா.ஆ.1 படி சொத்தை கிரையம் கொடுக்குமாறு கோரி இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதில் குறிப்பிட்டுள்ளவாறு வா.சா. 1 எழுதப்பட்ட தேதியில் என் கணவர் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததாக கூறுவது சரியல்ல. பிரதிவாதிகள் என் கணவரிடம்இருந்து கடன் தொகை எதுவும் இவ்வழக்கில் கூறியுள்ளவாறு பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னுடைய மாமியாரிடம் பெற்ற கடன் தொகைக்கு ஆதரவாக தான் ம.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் என்னுடைய கணவர் பெயரில் எழுதிபெறப்பட்டது என்றால் சரியல்ல.

16 எனவே தான் கடந்த 9 ஆண்டுகளாக பிரதிவாதிகளிடம் இருந்து அசலையோ அல்லது வட்டிதொகையையோ கேட்டு ம.சா.ஆ.1 அடிப்படையில் எவ்வித சட்டநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கான விவரங்களை என்னுடைய முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. இவ்வழக்கில் வாதியான என் கணவர் பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியவாறு தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற தகுதியற்றவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2025.08.12 17:54:47 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.